**ஒபெக் நிதியத்தின் மேல் மாகாண வீதி அபிவிருத்திச் செயற்திட்டம் - 2020**

---

ஒபெக் நிதியத்தின் மேல் மாகாண வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்த்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. இலங்கையின் மேல் மாகாணத்திலுள்ள முன் தெரிவு செய்யப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளின் 27 கிலோமீற்றர்களினை தரமுயர்த்துதல், முன்னேற்றுதல் மற்றும் விரிவாக்கல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 3,232.5 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 24.87 மில்லியனானதுடன் அதில் ரூபா 2,209.84 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 17 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2017 ஒக்டோபர் 05 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 ஜுன் 28 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2021 செப்தம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | வெளிவளங்கள் திணைக்களத்தின் பிரகாரம், 2020 ஆம் ஆண்டு முடிவிலான கடன் கணக்கு ரூபா 437 மில்லியனாகும் ஆனால் செயற்திட்டமானது அதனை ரூபா 273 மில்லியன் என காட்டியிருந்தது எனவே கடன் மீதி கடன் கணக்கில் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 164 | மீதித்தொகை ரூபா 163,659,874.71 2020 ஆம் ஆண்டிற்கான மீளப்பெறத்தக்க வெளிநாட்டு உதவியாக கணக்கிடப்பட்டிருந்தது. | கணக்கீட்டு காலப்பகுதி முடிவில் சரியான கடன் மீதியை காட்ட உண்மையான மீளப்பெறல்களை பதிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வேலை ஆரம்பிப்பு முற்பணம் ஒப்பந்த பொதி – 1 இன் வேலைப்பரப்பிலிருந்து வல்கம – அத்துருகிரிய வீதியின் புனரமைப்பு வேலைகள் நீக்கப்பட்டதன் காரணமாக செயற்திட்டத்தினால் ஒப்பந்ததாரரிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | 13 | உடன்பட்டனர். முற்பனகொடுப்பனவு இரண்டு வீதிகளினதும் பீ.ஓ.கியுவ்வில் உள்ளடக்கப்பட்டிருந்த அளவைப்பட்டியலின் சாராம்சதாளின் அடிப்படையில் கவனக்குறைவாக கணிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட வேலைப்பரப்பு செயற்திட்ட ஆரம்பத்தில் சரியாக அடயாளப்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | ஒப்பந்த பொதி – 1 இன் 2020 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதத்திற்கான 2 இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களுடன் தொடர்புபட்ட ஏற்பாடுகள் 2020 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 1.78 | திசெம்பர் மாதத்திற்கான பட்டியல் ரூபா 5.0 மில்லியன் ஏற்பாடு மாத்திரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டதன் பின்னர் பட்டியல் கிடைக்கப்பெறும் வரை செய்யப்பட்டிருந்தது. மீதித்தொகை 2021 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்டுள்ளது. | ஏற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல 08 இன் பிரகாரம் செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | பிரிவு 17 இன் கீழ் காணி உரிமையாளர்களிற்கு சட்டரீதியான இழப்பீடுகளை கொடுப்பதில் தாமதத்தின் மீதான வட்டி ரூபா 0.89 மில்லியன் 2020 திசெம்பர் 31இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | 0.28 | திசெம்பர் மாதத்திற்கான பட்டியல் ரூபா 5.0 மில்லியன் ஏற்பாடு மாத்திரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டதன் பின்னர் பட்டியல் கிடைக்கப்பெறும் வரை செய்யப்பட்டிருந்தது. மீதித்தொகை 2021 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் அனைத்து பொறுப்புக்களும் சரியாக பதியப்பல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக மற்றும் நிதி செயலாற்றல்

| விடயங்கள் | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயங்கள் | தாமதங்களிற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | எதிர் பார்க்கப்பட்ட பௌதிக செயலாற்றல் சதவீதம் | அடையப்பட்ட செயலாற்றல் சதவீதம் | | |
| ஒப்பந்தபொதி – 1 கடுவெல – அத்துருகிரிய வீதி. | 78% | 52% | வீதி நிர்மான வேலைகளின் செயலாற்றல் இலக்குகளிற்கு பின்னால் காணப்பட்டது. இது செயற்திட்டத்தினை தாமதப்படுத்துவதுடன் செயற்திட்ட கிரயத்தனையும் அதிகரிக்கும். | செயற்திட்டமானது காணி சுவீகரிப்பு விடயங்கள் மற்றும் ஒப்பந்ததாரரின் மந்தகதியயான செயலாற்றல் காரணமாக தாமதமடைகின்றது. |
| ஒப்பந்த பொதி - 2 வாதுவ – மொரட்டுவ வீதி, பெல்லன – மொரகாகல | 100% | 100% | | |

**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** உடன்பட்டனர்.

**கணக்காய்வாளர் பரிந்துரைகள்** இலக்கிடப்பட்ட திகதிகளில் வேலைகளை பூர்த்தி செய்ய நிர்மான நடவடிக்கைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

### 3.2 செயற்றிட்டத்தின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் தாமதங்கள்.

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|
| கடன் உடன்படிக்கையானது 2015 ஜுன் 26 இல் கையொப்பமிடப்பட்டிருந்தும், ஒப்பந்தபொதி - 1 இன் கீழான 02 வீதிகளின் புனரமைப்பு வேலைகள் 2 1/2 வருடங்கள் செலவான பின்னர் 2018 சனவரி 29 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்த அதேவேளை ஒப்பந்தபொதி – II இன் கீழான ஏனைய 02 வீதிகளின் புனரமைப்பு வேலைகளின் ஆரம்பிப்பு காணி சுவீகரிப்பிற்கு நேரம் எடுத்ததன் காரணமாக 2 வருடங்கள் 3 மாதங்கள் தாமதத்துடன் 2017 ஒக்டோபர் 05 இல் ஆரம்பிக்கப்பட்டது. இரப்பினும், ஒப்பந்த பொதி - 1 இன் கீழான வல்கம – அத்துருகிரிய வீதியின் 1.25 புனரமைப்பு வேலைகள் நிதிகளின் பற்றாக்குறை காரணமாக செயற்திட்டத்தின் வேலைப்பரப்பிலிருந்து அதனடிப்படையில் நீக்கப்பட்டிருந்தது. | உடன்பட்டனர். செயற்திட்டங்களின் ஆரம்பிப்பு காணி சுவீகரிப்பு செயன்முறை ஏற்றுக்கொள்ளத்தக்க மட்டத்தினை அடையும் வரை வேண்டுமென்றே தள்ளிவைக்கப்பட்டிருந்தது. வல்கம – அத்துருகிரிய வீதி பிரிவு காணி கொள்வனவில் மந்தகதியான செயலாற்றல் மற்றும் சிவில் கட்டுமான ஒப்பந்தங்களிற்கான கடன் ஒதுக்கீட்டில் குறைபாடு போன்ற காரணத்தினால் நீடிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் காணி சுவீகரிப்பு ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் கடனும் ஆரம்பிக்கப்பட்டு ஒப்பந்தம் கையளிக்கும் வரை செயற்பாட்டில் இருக்க வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்ர்பட்ட விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| கிடைத்திருக்கும் தகவல்களின் பிரகாரம், கடுவெல, பலிந்தநுவர அகலவத்த, வலளவிட்ட, பாணந்துறை மற்றும் களுத்துறை பிரதேச செயலாளர்களின் கண்காணிப்பின் கீழுள்ள பகுதிகளின் 489 அரச காணித்துண்டுகள் உள்ளடங்களாக 2687 காணித்துண்டுகள் வீதி நிர்மான நோக்கத்திற்காக செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இழப்பீடுகளை கொடுத்து தீர்ப்பதில் தாமதத்தின் காரணமாக ரூபா 286 மில்லியன் வட்டி உள்ளடங்களாக 1,400 மில்லியன் தொகையான இழப்பீடு 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1706 காணித்துண்டுகளிற்காக அதன்மீது செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், 22 காணித்துண்டுகள் மாத்திரமே காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. | கொள்வனவு செய்வதற்கான காணிகளின் எண்ணிக்கை தவிர்ந்த வழங்கப்பட்ட அனைத்து விபரங்களும் சரியாகும். | காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும் காணிகளை காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |